மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 10ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண். 03/2025
இன்
அசல் வழக்கு எண்.84/2024
-------

1. ராஜலட்சுமி
2. முருகேஸ்வரி
பெரிய கொல்லபட்டி ஊர் கிராம பொதுமக்களின்
பிரதிநிதிகள் ஸ்தானத்தில் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர் /

1. பொன்மாடன்
2. சண்முகத்தாய்
3. நடராஜன்
4. லில்லிபுஷ்பம்
5. மாவட்ட ஆட்சியர், விருதுநகர்
6. வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர்
7. வட்டாட்சியர், சாத்தூர்
8. ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர்(ஊ), விருதுநகர்
9. வட்டார வளர்ச்சி அலுவலர், சாத்தூர்.
10. ஊராட்சி மன்ற தலைவர்,
பெரியகொல்லபட்டி ஊராட்சி
பெரியகொல்லபட்டி. ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 24.04.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். சங்கர்ராம், அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. சுப்புராஜ், அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக இருந்து வரும் நிலையிலும்,

இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது தபசில் சொத்துக்களை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் உதவியுடன் சென்று பார்வையிட்டு அளந்து அத்துமால்கள் குறித்தும், தபசில் சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் அதன் தன்மைகள் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 26 விதி 9 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். மனுதாரரும், 1ம் வாதியும் பெரிய கொல்லபட்டி ஊர் கிராம பொதுக்களும் அன்றாடம் சென்று வரும் பொதுபாதையில் ஆக்கிரிமிப்பு செய்து இந்நிர் 1 முதல் 4 பிரதிவாதிகள் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். மேற்படி பொதுப்பாதை, இதன் தபசில் 1வது இலக்க சொத்தாகவும், அதிலுள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் இதன் தபசில் 2வது இலக்கசொத்தாகவும், தாவா வழக்கின் சொத்துவிபரத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்நிர் 1 முதல் 4 பிரதிவாதிகள் தபசில் சொத்து பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்திருப்பதால் மனுதாரரும், 2ம் வாதியும் பெரியகொல்லபட்டி கிராம ஊர்பொதுமக்கள் சார்பாக பிரதிநிதிகள் ஸ்தானத்தில் பொதுப்பாதை என்று விளம்புகை மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றிட கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2.2. பிராது தபசில் கண்ட சொத்து பெரியகொல்லபட்டி கிராமத்தில் நத்தம் புல எண்.315/57 அரசு புறம்போக்கு பாதை என கிராமக் கணக்கில் தாக்கல் ஆகியுள்ளது. மனுதாரர்களின் வீடு மேற்படி கிராமத்தில் புல எண்.315/55 என கிராமக் கணக்கில்

தாக்கலாகியுள்ளது. மனுதாரர்கள் வீட்டிற்கு தெற்கே புல எண்.315/54 ல் இந்நிர் 1 ம் பிரதிவாதிக்கு வீடு உள்ளது. மேற்படி 1 ம் பிரதிவாதி அவரது வீ்டிற்கு எதிரே உள்ள பாதையை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்து முதலில் தகரசெட் அமைத்திருந்தார். அதுபோல் மனுதாரர்கள் வீட்டிற்கு வடக்கே குடியிருந்து வரும் இந்நிர் 2 ம் பிரதிவாதி சர்வே எண். 315/20 ல் வீட்டிற்கு கிழக்கே உள்ள பொதுப்பாதையை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிவிட்டார். இந்நிர் 3, 4 பிரதிவாதிகள் கணவன் மனைவி ஆவார்கள்.

2.3. மேற்படி 2 ம் பிரதிவாதி வீட்டிற்கே வடக்கு 3, 4 பிரதிவாதிகளும் சர்வே எண்.315/19 ல் குடியிருந்து வருகின்றார்கள். மேற்படி 3, 4 பிரதிவாதிகளும் மேற்படி வீட்டிற்கு கிழக்கே உள்ள பொதுப்பாதையில் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிவிட்டார்கள். இவ்வாறு பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டும்போது மனுதாரர்கள் ஆட்சேபணை செய்தும் இந்நிர் 1 முதல் 4 அதை சிறிதும் பொருட்படுத்தவில்லை. இதனால் மனுதாரர்கள் இந்நிர் 1 முதல் 4 பிரதிவாதிகளின் பொதுப்பாதை ஆக்கிரமிப்பை பற்றி மேற்படி பெரிய கொல்லபட்டி கிராம நிர்வாக அலுவலரிடம் புகார் செய்திருந்தார். மேற்படி கிராம நிர்வாக அதிகாரி ஆக்கிரமிப்பை அகற்றிட சொல்லியும் 1 முதல் 4 பிரதிவாதிகள் அகற்றிவிடுவதாக கூறி வீணாக காலம் கடத்தி வந்தார்கள்.

2.4. மனுதாரர் கடந்த 26.06.2023 ம் தேதி சாத்தூர் வட்டாட்சியர் அவர்களிடம் பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிட கோரி மனுக் கொடுத்திருந்தார்கள். அதன்பின்னர் கடந்த 10.07.2023 ம் தேதி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு கொடுத்து அதன் பேரில் சாத்தூர் குறுவட்ட அளவர்(பொ) மற்றும் சாத்தூர் வருவாய் ஆய்வாளர் அவர்கள் தபசில் சொத்துக்களை அளவீடு செய்தும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை உறுதி செய்தும், சாத்தூர் வட்டாட்சியா அவர்களுக்கு அறிக்கை அளித்துள்ளார்கள். மேற்படியார்களின் அறிக்கையின் பேரில் கடந்த 14.07.2023 ம் தேதி சாத்தூர்

தனிவட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் (பொ.) அவர்கள் செல்முறை ஆணைகள் மூ.மு.அ 2/5634/2023 ல் ஆக்கிரமிப்பை அகற்றிட சாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு உத்தரவிட்டுள்ளார். மேற்படி செயல்முறைகள் ஆணைகள் உத்தரவை மனுதாரருக்கு கடந்த 27.07.2023 ம் தேதி மூ.மு.அ 2/6034/2023 மேலெழுத்து மூலம் தெரிவித்துள்ளார்கள். இருந்தபோதும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை சாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் அகற்றி தரவில்லை.

2.5. அதன்பின்னர் 1ம் பிரதிவாதி 1ம் வாதி மீது சமூக நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்துவிட்டு பொதுப்பாதையில் இருந்த தகரசெட்டை அகற்றி தற்போது அவரது வீட்டுடன் சேர்த்து காரை கட்டிடமாக கட்டிவிட்டார். இந்நிர் 2 முதல் 4 பிரதிவாதிகளும் பொதுப்பாதையில் ஆக்கிரமிப்பு செய்து அவரது வீட்டுடன் சேர்த்து காரை கட்டிடமாக வீடு கட்டிவிட்டார்கள். இவ்வாறு பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதால் மனுதாரர்கள் உட்பட பொதுமக்கள் யாவரும் மேற்படி பொதுப்பாதையை பயன்படுத்த முடியாமல் இருந்து வருகிறது. மேற்படி 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியதிருக்கிறது. எனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்தைப் பார்வையிட்டு அளந்து அத்துமால்கள் குறித்தும் அமைப்பு குறித்தும் தன்மை குறித்தும் அறிக்கை தாக்கல் செய்தால தான் பிரதிவாதகள் எந்த அளவிற்கு தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது நிரூபிக்க முடியும். எனவே தகுதிவாய்ந்த சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி அவர்களின் உதவியுடன் தபசில் சொத்துக்களை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல். இம்மனு அனுமதிக்காது போனால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டநஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்கள்/1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் –</u>

**3.1.** 2ம் மனுதாரர் 2ம் வாதி தாக்கல் செய்திருக்கும் இடைக்கால மனு

தவறானது. மேற்படி இடைக்கால மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி இம்மனுவில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் யாவும் பொய்யென மறுக்கப்படுகிறது. ஊர் பொது மக்கள் ஸ்தானத்தில் பிரதிநிதியாக இருந்து பொதுமக்களின் நலனில் அக்கறை உள்ள நபர்போல் வழக்கு தாக்கல் செய்திருப்பது கட்டவிரோமான செயலாகும். மேற்படி நபர் பொதுநல விரும்பி அல்ல. மேற்படி 2ம் மனுதாரரும், 1ம் வாதியும் கூட்டு சேர்ந்து 1ம் பிரதிவாதியை தொந்தரவு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் 2ம் மனுதாரர் இடை மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரியிருப்பது பிரதிவாதிக்கும் மற்ற 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் வீண் தொந்தரவும், நிவ்ாக குளறுபடி ஏற்படுத்தக்கூடும். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் 2, 4 ஆகிய பிரதிவாதிகள் எந்தவொரு பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை.

3.2. தாவா சொத்து ஆதிகாலத்தில் விருதுநகர் மாவட்டம் பிரிப்பதற்கு முன்பு இாமநாதபுரம் மாவட்டத்தில் அடங்கியிருந்தபோது மேற்படி கிராமத்தில் வசித்து வந்த துாண்டில்மாடன் என்பவருக்கு அரசு மூலம் உரிமை பாத்தியம் வழங்கப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தை துாண்டில் மாடன் அனுபவம் செய்து வந்து அதன்பின்பு சண்முகத்தாய்க்கு கிரையம் எழுதிக் கொடுத்த சொத்தாகும். அதன்பின்பு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு அவருடைய தாய் சண்முகத்தாய் கிரையம் எழுதிக்கொடுத்த சொத்தாகும். 1ம் எதிமனுதாரர்/1, 2, 4 பிரதிவாதிகள் எந்தக் காலத்திலும் பொதுப்பாதை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மேற்படி தாவா சொத்து இன்றளவும் அப்படியே பாதையாக உள்ளது.

3.3. மேற்படி பாதையில் அரசுதான் அங்கன்வாடி மையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வேண்டி சிறிது மேற்குப்பக்கம் தள்ளி கட்டிடம் கட்டியுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/ 1,2,4 பிரதிவாதிகள் அல்ல. மேற்படி தாவா சொத்து கிராம பதிவேட்டில் தவறுதலாக பதிவாகியுள்ளது. மேற்படி யுடிஆர்–ல் தான் தவறு உள்ளது.

அதை அரசுதான் மறு சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றாகும். 2ம் மனுதாரர் இடைக்கால மனு தாக்கல் செய்திருக்கும் மனுவில் கூறிய சங்கதிகள் பொதுப்பாதை ஆக்கிரமித்து தகரசெட்டாக அமைத்து அதன் பிறகு காரை வீடு கட்டியுள்ளார் என்று கூறுவது பொய்யென மறுக்கப்படுகிறது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் சட்டப்படியான முறையில் பதிவு பெற்ற ஆவணம்மூலம் பாத்தியப்பட்டு மேற்படி இடத்தில் வீடு கட்டியுள்ளார். மேற்படி வீடு கட்டும்போதே அமைதியாக இருந்துவிட்டு தற்போது பொது நல விரும்பி மேற்படி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே இ.ம.எண்.03/2025 மனுவை 1ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். மனு குறித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. மனுதாரர் இம்மனுவில் 2 முதல் 4 பிரதிவாதிகளும் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து அவர்களது வீட்டுடன் சேர்த்து காரை கட்டிடமாக வீடு கட்டிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் இது குறித்து தாவா சொத்து துாண்டில்மாடன் என்பவருக்கு அரசு மூலம் உரிமை பாத்தியம் வழங்கப்பட்ட சொத்தாகும். அதன்வழி கிரையம் பெற்று பிரதிவாதிகள் பாத்தியத்திற்கு வந்தடைந்தது என்றும், 1, 2, 4 பிரதிவாதிகள் எந்தக் காலத்திலும் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று எடுத்துரைத்துள்ளனர். மேலும் இது குறித்து யூடிஆர்–ல் தான் தவறு உள்ளது என்றும் கூறியுள்ளனர். இத்தகைய சூழலில் வழக்கில் கோரியுள்ள நிவாரணங்களை குறித்து நல்லமுறையில் தீர்மானிப்பதற்கும், ஆக்கிரமிப்பு குறித்த தெளிவை எட்டுவதற்கும் நீதிமன்ற

ஆணையரை நியமிப்பதே நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திருமதி. B. கணபதியம்மாள் **M.S.No.1328/2022** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் முன்னறிவிப்பு கொடுத்து மனு தபசில் சொத்துக்களை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் தபசில் சொத்துக்களின் அத்துமால்கள் மற்றும் அதன் தன்மைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையருக்கான கட்டணம் ரூ.7000/—ம் என நிர்ணயம் செய்யப்பட்டு, மனுதாரர்கள் செலுத்த வேண்டும் எனவும், மனுச் சொத்தைப் பார்வையிடச் செல்லும் சமயத்தில் பகுதி தொகையாக ரூ.3500/—யை நீதிமன்ற ஆணையர் வசம் மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்றும், அறிக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் மீதித் தொகையான ரூ.3500/—யை நீதிமன்ற ஆணையரிடம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய 06.07.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10—ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்துார்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.03/2025
இன்
அ.வ.எண்.84/2024
**உத்தரவு**
நாள்–10.06.2026.